INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

W ITJPSL.COM
E ITJPSL@GMAIL.COM

EXECUTIVE DIRECTOR:
YASMIN SOOKA

**ஊடக அறிக்கை: சிசிர மென்டிஸ் விசாரணை செய்யப்படாமல் வெகுமதி அளிக்கப்பட்டுள்ளார்**

**24 ஆடி 2017.**

ஜோகானஸ்பேர்க் : போர் உச்சக்கட்டமாக நடந்து கொண்டிருந்த காலப்பகுதியில் நாட்டின் மிகவும் மோசமான சித்திரவதைக்கு பெயர்போன இடத்தினை நடாத்தி வந்த சிசிர மென்டிஸ் இற்கு வெகுமதியளிக்குமுகமாக அவருடைய பதவியினை மீளப்புதுப்பிப்பதன் மூலம், இலங்கையானது சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களையும் ஐ.நா அமைப்பினையும் மீண்டும் ஒருமுறை முற்றிலும் அவமதித்துள்ளது. பொது மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளைத் தகுதிகாண் தரப்படுத்தலுக்கு உட்படுத்துவதாக இரண்டு வருடங்களிற்கு முன்னர் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு கொழும்பு உறுதிப்பாட்டை வழங்கிய போதும் இது இடம்பெற்றுள்ளது.

‘‘*மிக உயர்ந்த இராணுவப் பதவிகள், இராஜதந்திர பதவிகள் மற்றும் சாட்சிகளைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பில் கூட நியமங்களை வழங்கி இலங்கையானது தொடர்ந்தும் குற்றவாளிகளை பாதுகாத்தும், வெகுமதியளித்தும் வருகின்றது’’* என சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார். *‘‘பாதிக்கப்பட்டவர்களுக்கான மதிப்பு எங்கே?, விசாரணைகளுக்கான எந்தவிதமான முன்னெடுப்புக்களையும் மேற்கொள்ளாத இவ்வாறான ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளினால் நான் அதிர்ச்சியடைந்துள்ளேன்’’.* எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

திரு சிசிர மென்டிஸ் பங்குனி 2008 இலிருந்து ஆனி 2009 வரையான காலப்பகுதியில் காவல்துறையின் குற்றப் புலனாய்வுத் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபராக (Deputy Inspector General) இருந்த அதேவேளை பயங்கரவாத புலனாய்வு பிரிவிற்கும் (Terrorism Investigation Division) பொறுப்பாக இருந்துள்ளார். இலங்கையர்களினால் சித்தரவதையை விபரிக்க சுருக்கமான சொல்லாக “நான்காம் மாடி” என பரவலாக குறிப்பிடப்படும் இடத்திற்கும் இவர் பொறுப்பாக இருந்துள்ளார்.

2015 ஆம் ஆண்டின் *ஐ.நா அறிக்கையில்* திரு மென்டிஸினுடைய பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அவருடைய தலைமையகத்தில் சித்திரவதைக்காகப் பயன்படுத்தப்பட்ட விசாரணை அறைகள் அடிப்பதற்குப் பயன்படுத்தட்ட உலோக பட்டங்கள், கம்பிகள், தலையைத் தண்ணீருக்குள் அமுக்குவதற்குப் பயன்படுத்தப்படும் தண்ணீர்ப் பீப்பாய்கள், கப்பிகள் மற்றும் உபகரணங்களை கொண்டிருந்ததாக இந்த அறிக்கையில் விபரிக்கப்பட்டுள்ளது. (பந்தி 13)

சிறிசேன அரசாங்கத்தின் கீழ் திரு மென்டிஸை தேசிய புலனாய்வுப் பொறுப்பதிகரியாகக் கொண்டுவருவதற்காக, அவரிற்கு ஓய்வு வழங்கப்பட்டது. திரு மென்டிஸினது இப்பதவி அமைச்சரவையினால் மேலும் ஒரு வருட காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது என செய்தி அறிக்கைகள் கூறுகின்றன. ''*இது நாட்டில் தண்டனையிலிருந்து பாதுகாப்பதனை உருவாக்குவதற்கு ஒப்பானது அத்துடன் இலங்கையில் சித்திரவதை ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்று என்ற செய்தியையும் வழங்குகின்றது*'' என ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

கடந்த கார்த்திகை மாதம், இலங்கை அரசாங்கம் ஐ.நாவின் சித்திரவதைக்கு எதிரான குழுவிற்கான இலங்கையின் *பிரதிநிதிகள் குழுவில்* ஒருவராக திரு மென்சினை ஜெனிவாவிற்கு அனுப்பியிருந்தது. இச் சித்திரவதைக்கு எதிரான குழு இவரின் பங்கேற்புத் தொடர்பாக தாம் ''எச்சரிக்கைப் படுத்தப்பட்டதாக'' குறிப்பிட்டிருந்தது. திரு மென்டிஸ் தனது கடந்த காலம் பற்றிய குழுவினது கேள்விகளுக்கு பதிலளிக்க *மறுத்துவிட்டார்*. மார்கழி 2016 இல் குழுவின் இறுதியான அவதானிப்பில் (பந்தி 13), இலங்கை அரசாங்கத்திடம் சித்திரவதை தொடர்பான குற்றச்சாட்டுக்கள் குறித்து திரு மென்டிஸினது பங்கு மற்றும் பொறுப்புக்கள் என்ன என்பது பற்றிய விரிவான தகவல்களை வழங்குமாறும், நம்பகத் தன்மையுடைய தகுதிகாண் செயல்முறைகளை முன்னெடுக்கும்படியும் இக்குழு உத்தியோகபூர்வமாக இலங்கை அரசினைக் கேட்டிருந்தது.

''*திரு மென்டிஸிற்கு எதிரான குற்றச்சாட்டுக்களை தீவிரமாக எடுத்துக்கொள்ள மறுப்பதானது ஐ.நாவின் சித்திரவதைக்கு எதிரான குழு, மற்றும் தனது 2015 ஆம் ஆண்டு விசாரணையில் இவரின் பெயரை குறிப்பிட்டிருந்த மனித உரிமைக்கான உயர் ஆணையாளர் அலுவலகம் ஆகியவற்றிற்கு அவமதிப்பதாக உள்ளது. சித்திரவதைக்கு எதிரான உடன்படிக்கையை பலவீனமாக்கும் இவ்வாறான செயற்பாடுகளை இனிமேலும் பொறுத்துக் கொள்ள முடியாது என்பதனை சர்வதேச சமூகம் தெளிவாக்க வேண்டும்*''- என ஜஸ்மின் சூக்கா குறிப்பிட்டுள்ளார்.

முற்றும்.

.

INTERNATIONAL
TRUTH
AND JUSTICE
PROJECT